**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No: 165 /2024**

**Dated:07.01.2026**
**Deposition of Witnesses for PW -1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. அழகேசன் | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**1,2 எதிரிகள் ஆஜரில் இல்லை.மனு தாக்கல் செய்து அனுமதிக்கபட்டது.இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**
**Aathar card of the Witness verified.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சிவகங்கை மாவட்டம் கீழடி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.01.2024 ம் தேதி நான் திருச்சி போதைப்பொருள் தடுப்பு பிரிவில் முதல்நிலைகாவலராக பணிபுரிந்தபோது திருச்சி போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவில் சிறப்பு சார்வு ஆய்வாளர் காளிமுத்து அவர்களுக்கு உதவியாக நிலையத்தில் இருந்து 1.30 மணிக்கு தக்க உபகரணங்களுடன் திருச்சி ரயில்வே நிலையம் பிளாட்பார்ம் 2 க்கு இரயில்வே பாதுகாப்பு படை பிரபு என்பவர் உதவியுடன் ஹவுரா எக்ஸ்பிரஸ் ல் இரவு 2.30 மணிக்கு இறங்கி வந்த பயணிகளை சோதனை செய்தோம். பின் 5.30 மணியளவில் சுரங்க நடைபாதையில் நின்று கொண்டிருந்தவர்கள் எங்களை பார்த்து தப்பித்து

ஓட முயற்சித்த மாரியப்பன் , திருநெல்வேலி அவர் கொண்டு வந்த கருப்பு நிற பேக் 2 காக்கி நிற பார்சல் அவருடன் வந்த மற்றொரு நபர் பெயர் தெரியவில்லை அவர் கொண்டு வந்த கருப்பு நிற பேக் 6 காக்கி நிற பார்சல் இருந்தது. தலா 50 கிராம் வீதம் 8 பாக்கெட் இராசயன பரிசோதனைக்கும் தலா 50 கிராம் நகல் மாதிரிக்கும் எடுத்தோம். அதனை S,L என குறியீடு செய்தோம்.மீதமுள்ள 15.200 கிராம் C என குறியீடு செய்து நிலையம் கொண்டு சென்றோம்.நாங்கள் கொண்டு சென்ற தராசில் எடைபோட்டு பார்க்க மொத்தம் 16 கிலோ கஞ்சா இருந்தது.சோதனை சம்மத கடிதம அ.த.சா.ஆ 1,2 ஆக குறியீடு செய்யபடுகிறது.ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது. அது அ.த.சா.ஆ 3,4 ஆக குறியீடு செய்யபடுகிறது.கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ 5,6 ஆக குறியீடு செய்யபடுகிறது. ஆய்வு நமுனாக்கள் அ.த.சா.ஆ 7,8 ஆக குறியீடு செய்யபடுகிறது.அவர்கள் இருவரையும் கைது செய்து நிலையம் வந்து NIBCID திருச்சி குற்ற எண் 01/2024 வழக்கு பதிவு செய்ய சிறப்பு உதவி ஆய்வாளர் காளிமுத்து உதவியாக இருந்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

சோதனை சம்மத கடிதத்தில் அரசிதழ் பெற்ற அதிகாரியிடமோ அல்லது நீதித்துறை நடுவர் முன்பாகவோ சோதனை செய்ய எதிரியாகிய உமக்கு உரிமை உள்ளது என்ற விவரத்தை சரிவர எடுத்து சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. சோதனை சம்மத கடிதங்கள் பிரிண்ட் பார்மெட்டில் பேனா மையால் பூர்த்தி செய்யபட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பிரிண்ட் பார்மெட்டில் உள்ள படிவங்களில் சம்பவ இடத்திற்கு சென்று யார் பெயரை வேண்டுமானாலும் நிரப்பி கொள்ளலாம் என்று சொன்னால் சரிதான். ஆய்வு நமுனாவில் பொதுவாக எதிரியை கைது செய்யும்போது அவர்களது உறவினர்களுக்கு எப்படி தகவல் சொல்வோம் என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.கைப்பற்றுதல் மகஜர்களில் SHO சீல் வைக்கபடவில்லை என்று சொன்னால் சரிதான்.நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும் நான் சிறப்பு சார்பு ஆய்வாளருடன் ரைடுக்கு செல்லவில்லை என்றும் எதிரிகளுக்கும் வழக்கு சொத்திற்கும் தொடர்பு இல்லை என்றும் எதிரிகளிடம் இருந்து கஞ்சா எதுவும் கைப்பற்றபடவில்லை என்றும் எதிரிகள் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றும் அதற்காக வழக்கு

ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டும் மேற்படி ஆவணங்களில் உயர் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்து விட்டு தற்போது உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.1,2 எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் ஆவணங்களுக்கு தகுந்தார் போல் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன்.என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யபடவில்லை என்றும் வீட்டில் இருந்த நபரை விசாரணை என்ற பெயரில் காவல் நிலையம் அழைத்து சென்று பொய்யாக வழக்கு பதிவு செய்யபட்டுள்ளது என்றும் , உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன்.என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:-**

**இல்லை.**

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றம் அவரது வழக்குநர்
முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு
சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,
புதுக்கோட்டை.